Name of the Newspaper: ......Dinamani...... Date: 28-5-18

# இலவச மெட்ரோ ரயில் பயணம்: மூன்றாவது நாளும் குவிந்த பொதுமக்கள்

## ஒரே நாளில் 2 லட்சம் பேர் பயணம்

சென்னை,மே 27: சென்னையில் புதிதாக தொடங்கப்பட்ட மெட்ரோ ரயில் வழித்தடங்களில் இலவச பயணம் செய்ய மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமை பொதுமக்கள் குவிந்தனர்.

சென்ட்ரல்-நேரு பூங்கா,தேனாம்பேட்டை டி.எம்.எஸ். - சின்னமலை இடையே புதிய வழித்தடங்களில் மெட்ரோ ரயில் போக்குவரத்து வெள்ளிக்கிழமை தொடங்கப்பட்டது. அன்றைய தினம் பயணிகள் இலவசமாக பயணிக்க அனுமதிக்கப்பட்டது. ஆனால், இது குறித்து மக்களுக்கு தெரியாததால், இலவசமாக பயணிக்க குறைவானவர்களே வந்து இருந்தனர். இந்த நிலையில், சனிக்கிழமை பொதுமக்கள் புதிய வழித்தடங்களில் இலவசமாக பயணிக்கலாம் என அறிவிக்கப்பட்டது.

இதனால்,சனிக்கிழமைமெட்ரோ ரயில் நிலையங்களில் பொதுமக்கள் கூட்டம் அலைமோதியது. சென்ட்ரல் -விமானநிலையம், சென்ட்ரல் - பரங்கிமலை, தேனாம்பேட்டை டி.எம்.எஸ். - பரங்கிமலை ஆகிய வழித்தடங்களில் பொதுமக்கள் மெட்ரோ ரயில்களில் இலவசமாக பயணம் செய்து மகிழ்ச்சி அடைந்தனர். இதற்கிடையே ஞாயிற்றுக்கிழமையும் பொதுமக்கள் இலவசமாக புதிய வழித்தடங்களில் பயணிக்கலாம் என மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்தது.

இதனால் மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமையும் இலவசமாக மெட்ரோ ரயிலில் பயணிக்க அனுமதிக்கப்பட்டனர். மற்ற இரு நாள்களையும் விட ஞாயிற்றுக்கிழமை மெட்ரோ ரயில்களில் கூட்டம் கட்டுக்கடங்காமல் இருந்தது. காலை 6 மணி முதலே பொதுமக்கள் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு வரத் தொடங்கினர். மேலும், பொதுமக்கள் குடும்பத்துடன் மெட்ரோ ரயிலில் பயணிப்பதற்கு ஆர்வம் காட்டினர். அதேபோல மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய சிறுவர்-சிறுமியர் அதிகளவில் தங்களது பெற்றோருடன் வந்திருந்ததை காண முடிந்தது.



மெட்ரோ ரயிலில் இலவச பயணம் மேற்கொள்ள சென்னை எழும்பூர் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை அலைமோதிய பயணிகள் கூட்டம்.

இதன் காரணமாக மெட்ரோ ரயில் நிலையங்கள் மக்கள் வெள்ளத்தில் மிதந்தது. இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள் கூறியது:

மெட்ரோ ரயில் புதிய வழித்தடத்தில் வெள்ளிக்கிழமை 50,000 பேர் பயணம் செய்தனர். இரண்டாவது நாளான சனிக்கிழமை 1,20,500 பேர் பயணம் செய்து மகிழ்ச்சி அடைந்தனர். திங்கள்கிழமை மெட்ரோ ரயிலில் பயணிக்க கட்டணம் வசூலிக்கப்படும் என்றனர்.

அதேவேளையில் ஞாயிற்றுக்கிழமை மாலை வரை மெட்ரோ ரயிலில் சுமார் 2 லட்சம் பயணம் செய்ததாக மெட்ரோ நிறுவனத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் தெரிவித்தனர்.